**செய்தி வெளியீடு:761 15.9.2008**

# அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி விலைமதிப்பில்லா மனித உயிர்களைக் காக்கும் அவசர மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

நமது நாட்டில் பெருகி வரும் சாலை விபத்துகளில் ஓர் ஆண்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் வரை உயிர் இழக்கின்றனர்; ஏறத்தாழ 5 லட்சம் முதல் 6 லட்சம் பேர் வரை காயமடைகின்றனர். கிராமப் பகுதிகளில் மகப்பேறு காலங்களில் கர்ப்பிணிப் பெண்களும், விஷக் கடிகளாலும், வெறி நாய்களாலும் கடிபட்டுப் பாதிக்கப்படுவோரும், உடனடியாகச் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்க நேரிடுகிறது. விலை மதிப்பில்லா மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு விபத்துகளில் பாதிக்கப் படுவோருக்கு உரிய சிகிச்சைகளை உடனடியாக அளிப்பதற்காக, அவசரகால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திட முடிவு செய்து, அதன்படி, 16 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 187 வட்டாரங்களில் அவசரகால மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைத் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேலும் செம்மையாகச் செயல் படுத்திடவும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்திடவும் ஆந்திரமாநிலம் ஐதராபாத் நகரைச் சேர்ந்த இ.எம்.ஆர்.ஐ. (EMRI) என்னும் தொண்டு நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆந்திரம், குஜராத் மற்றும் உத்ராஞ்சல் மாநிலங்களில் இதே போன்ற திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல அனுபவம் பெற்றுள்ளது. அந்நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட தமிழக அரசு 6.5.2008 அன்று, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இந்த இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்திடம் முதற்கட்டமாக குளிர்சாதன வசதி மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் பொருத்தப்பட்டுள்ள 198 அவசர கால மருத்துவ ஊர்திகள் தமிழக அரசினால் 17 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டுவரும் 187 அவசரகால மருத்துவ ஊர்திகளும் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு 34 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 385 அவசரகால மருத்துவ ஊர்திகள் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்–பாளர்களை இ.எம்.ஆர்.ஐ. நிறுவனம் தேர்வு செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்துள்ளது.

இத்திட்டத்திற்குரிய 'மத்திய செயல்பாட்டு நிலையம்', சென்னை அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி நிலையத்தில், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்தினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய செயல்பாட்டு நிலையத்தில், தகவல் தொடர்புகளுக்குத் தேவைப்படும் கணினிகளும், அதற்கான மென்பொருள்களும் பொருத்தப் பட்டுள்ளன.

மருத்துவத்துறை, தீயணைப்புத் துறை, காவல் துறை ஆகிய துறைகளின் அவசர உதவி தேவைப்படும் பொதுமக்கள், இத்திட்டத்திற்கென அமைக்கப்பட்டுள்ள **கட்டணமில்லா தொலைபேசி எண்.108–ஐ பயன்படுத்தி,** தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொண்ட சில நொடிகளில், அவசர கால மருத்துவ ஊர்தி புறப்பட்டு, அரை மணி நேரத்திற்குள் நோயாளி இருக்கும் இடத்திற்குச் சென்று, அவருக்குத் தேவைப்படும் முதல் கட்ட அவசர சிகிச்சையை அளிக்கும். பின்னர், அந்த நோயாளியை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து, அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாக வழங்கும். இந்தச் சிகிச்சைக்காக நோயாளியிடம் முதல் 24 மணி நேரத்திற்கு எந்த கட்டணமும் வசூலிக்கப் படமாட்டாது.

அதன் பின்னர், நோயாளியின் விருப்பத்திற்கேற்ப, அவர் விரும்பும் மருத்துவ மனையில் சேர்ந்து தொடர் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்திற்காக மொத்தம் 385 மருத்துவ ஊர்திகளுக்கு அனுமதிக்கப்பட்ட 34 கோடியே 65 இலட்சம் ரூபாய் தவிர இத்திட்டத்திற்குரிய மத்திய கட்டுப்பாட்டு மையத்திற்கான கட்டடம் புதிதாகக் கட்டப்படவும், இதர நிர்வாகச் செலவுகளுக்காகவும் மேலும் 36 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலையில் உள்ள உயிர்களைக் காக்கும் சீரிய இந்தத் திட்டத்தின்கீழ், முதலில் சென்னையில் 20 அவசர மருத்துவ ஊர்திகளை வழங்கி முதலமைச்சர் கலைஞர் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்நிகழ்வின்போது மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீசஸ் தலைவர்–நிறுவனர் திரு பி. ராமலிங்க ராஜு, கவிஞர் கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் திரு. டேவிடார் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

***